சில கழகப் பள்ளி ஆசிரியர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கலாம். இப்படியுள்ள ஒரு சிலரை வைத்துக்கொண்டு 1974 வரை பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. அரசு சார்பு விதிகளின்படி விதிகளுக்கு இணங்கி நியமிக்கப்பட்டவர்களுக்குக்கூட 1974 முதல் பணி வரன்முறை செய்யப்படும் என்று உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த அறிக்கையிலே அவர்கள் எந்தவிதமான முன்னுரிமையும் பெறுவதற்கு உரிமையில்லை என்று சொன்னாலும் கூட, 1-4-1970-ல் அரசு சார்பு விதிகளின்படி கல்வித் தகுதியும், வயது வரம்புக்கும் உட்பட்டவர்கள் அனைவருக்குமாவது 1-4-1970 முதல் பணியை வரன்முறை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(2) 26-8-1978 அன்று எண்ணூரில் படகு விபத்தில்
பள்ளி மாணவர்கள் இறந்தது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, ''26-8-78 அன்று எண்ணூரில் ஏற்பட்ட படகு விபத்தில் பள்ளி மாணவர்கள் 15 பேர் இறந்தது குறித்து'' கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை வண்ணாரப்பேட்டை பி. ஏ. கே. பழனிச்சாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில், சாரணப்பிரிவைச் சேர்ந்த 64 மாணவர்கள் திரு. சீனிவாசம் என்னும் தமிழாசிரியர் தலைமையில் (சாரணர் பிரிவுத் தலைவர்) 26-8-78 அன்று எண்ணூர் அருகே உள்ள தாழங்குப்பம் என்னுமிடத்திற்குச் சுற்றுலாச் சென்றனர். இவர்கள் சாலை வழியாக கத்திபவாக்கம் என்னுமிடத்தை 26-8-78 அன்று காலை 10-00 மணியளவில் சென்றடைந்தனர். அங்கிருந்து முத்துவாரிக்குப்பம் என்னும் தீவிற்குச் செல்லும் பொருட்டு சாரணர் பிரிவின் தலைவர் இரண்டு மீன் பிடிக்கும் படகுகளை போக்குவரத்துக் கூலி ரூ. 30-க்கு அமர்த்திக் கொண்டார். அப்படகுகள் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு உரிமம் வழங்கப்பட்டவை அல்ல. படகொன்றிற்கு 32 மாணவர்கள் வீதம் ஏற்றிக் கொண்டு 11-00 மணியளவில் இரு படகுகளும் புறப்பட்டன. முதல் படகில் சாரணர் பிரிவுத் தலைவர் ஏறிக்கொண்டார்,

1978 செப்டம்பர் 11] [திரு. செ. அரங்கநாயகம்]

படகுகள் சென்று கொண்டு இருக்கையில் சுமார் 11-30 மணி யளவில் முத்துவாரிக்குப்பத்திற்கு அருகில் ஒரு படகு கவிழ்ந்து விட்டதாக சைதாப்பேட்டை கோட்ட ஆட்சியாளர் தெரிவித் துள்ளார். கவிழ்ந்த படகில் ஏற்கனவே ஓரளவு நீர் கசிந்து கொண்டிருந்ததால், அதிலிருந்து மாணவச் சாரணர்கள் குரல் எழுப்பினர் எனக் கூறப்படுகிறது. படகு கவிழ்ந்ததால் மூழ்கிய 32 மாணவர்களில், 7 மாணவர்கள் உடனேமீட்கப்பட்டுவிட்டனர். 13 மாணவர்கள் பின் மீட்கப்பட்டு சென்னை ஸ்டேன்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு 3 பேர் இறந்துவிட்டனர்; மீதி 12 பேர் மூழ்கி இறந்துவிட்டனர். மற்றொரு படகில் சென்ற 32 மாணவர்களும் அதிலிருந்த சாரணர் பிரிவுத் தலைவரும் உடனே நலமாக சத்தியவாக்கம் திரும்பிவிட்டனர். விபத்து நடந்த இடம் முகத்துவாரத்திலிருந்து 2 பர்லாங் தூரத்திலுள்ள தாகவும் அங்கு நீரின் ஆழம் சுமார் 20 அடி உள்ளது எனவும் சைதாப்பேட்டை கோட்டாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

இத்துயரச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை முடிவுக்குப் பின்னர், குற்றவாளிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது படகு விபத்து நடந்த பகுதியில் பதட்டநிலை ஏதுமில்லை.

பதினைந்து மாணவர்களின் உயிரிழப்புக்கு இவ்வரசு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கு மனிதாபிமானத்தின் அடிப்படையில் மக்கள்பால் நல்லெண்ணமும் தாய்மை உணர்வும் கொண்டு, பேரிழப்புக்கு ஆளான ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 5,000- (ரூபாய் ஐயாயிரம்) வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட 30-8-78 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

மாணவர்கள் எந்த ஒரு சுற்றுலாப் பயணத்தையும் மேற் கொள்ளுமுன், போதிய தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திட்ட வட்டமாகச் செய்து முடித்த பின்னர்தான், அப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையான உத்தரவினை 12-6-1950 நாளன்று கல்வி இயக்குநர் பிறப்பித்துள்ளார். அது இன்னும் அமுலில் இருந்து வருகிறது. அவ்வுத்தரவினை படகு விபத்துக் குள்ளான சாரணப் பிரிவின் தலைவரும், பள்ளி நிர்வாகத்தினரும் கடைப்பிடித்தனரா என்பது விசாரணையில் கண்டறியப்பட்டு தவறிழைத்தவர்கள் மீது கடுமையான துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இது போன்ற துயரம் மிக்க விபத்துக்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்கும் வகையில் அரசு கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்துத் தகுந்த உத்தரவினை பிறப்பிக்கும்.

[1978 செப்டம்பர் 11

(பிற்பகல் 5-30)

திரு. க. மீனுட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, விபத்துக்கு ஆளான, இறந்துபோன மாணவர்களுடைய குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை அளித்திருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னுர்கள். அந்தத் தொகையினை ரூபாய் 10,000 ஆக உயர்த்த அரசு முயற்சி செய்யுமா? அதோடு இந்த உடற் பயிற்சிக் கல்விப் பாடத் திட்டத்திலே நீச்சல் பயிற்சியையும் இனி ஒரு பாடமாகச் சேர்த்து பள்ளிகளிலே அதைப் பயிற்சியாக அளிக்கத் தக்க ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஐயாயிரம் ரூபாயை பத்தாயிரம் ரூபாயாகக் கூட்டும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஒவ்வொரு மாணவருக்கும் நீச்சல் தெரிந்திருப்பது நலம் என்று அரசு கருதுகிறது. அதற்கு போதுமான வசதிகள் கூட இப்பொழுது சென்னையில் செய்யப்பட்டுள்ளன. அதற்கு என்று தனியாக ஒரு கோச் கூட இருக்கிருர். மாணவர்களாகவே வந்து பயிற்சி பெற வேண்டும். யாரையும் கட்டாயப்படுத்துவதற்கில்லை.

திரு. ஆ. நல்லசிவம்: அந்த ஆசிரியர் சாரணர்களை முத்து வாரிக்குப்பம் தீவிற்கு அழைத்துச் செல்வது சம்பந்தமாக முன்பே திட்டமிடப்பட்டிருந்ததா? 64 சாரணர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியர் துணையாகப்போயிருக்கிருர். 64 சாரணர்களுக்கும் இரண்டு படகுகளில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 பேர் செல்லக் கூடிய படகில் 32 பேர் செல்லும் நிலை எதனுல் ஏற்பட்டது? போலீஸ் விசாரணை மட்டுமல்லாமல், நீதி விசாரணை ஏற்படுத்துவதுகூட நல்லது. அப்படிச்செய்து தமிழ் நாட்டிலுள்ள அனைத்து சாரணர்களுக்கும் இது ஒரு படிப்பினையாக இருக்கத் தக்க வகையில் இதற்கு என்று ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சட்டம் மீறப்பட்டிருக்கிறதா இல்லையா என்று போலீசார் விசாரித்துக் கொண்டிருக்கிருர்கள். மேலும் இலாகாபூர்வமாக கல்வித் துறை வேறு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தகவல் கோரல்.

ஆளுநர் உரை விவாதத்திற்கு பதிலுரை குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 'பாயின்ட் ஆப் ஆர்டர்' செயலாளர் அவர்கள் உறுப்பினர்களுக்கு இந்த கூட்டத் தொடரிலே நடைபெற இருக்கின்ற அலுவல்கள் குறித்து ஒரு